**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (செயற்திட்டம் - 1) - 2016**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (செயற்திட்டம்-1) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரைமையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம், வலு மற்றும் மீள்சுழற்சி சக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பங்கொன்றாக மீள்சுழற்சி சக்தி உற்பத்தியை அதிகரித்தல், பரிமாற்றக் கட்டமைப்பை உயர்த்துதல், வலையமைப்பு வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் கேள்விப் பக்க முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தல் என்பவற்றை நிகழ்ச்சித்திட்டம் இலக்கிடுகின்றது. நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,509.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,325.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்தது.

நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 பெப்ரவரி 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. நிதி ஏற்பாடு இரண்டு கடன் உடன்படிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நிதி மூல விபரங்களின் நிதியிடல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மூலம் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி<br>சாதாரண மூலதன வளங்கள் (ஓசீஆர்) கடன் | 121.00 | 15,680.40 |
| **ஆசிய அபிவிருத்தி நிதிய கடன்** | 29.00 | 3,758.10 |
| **பிரான்சிஸ் அபிவிருத்தி முகவர் கடன்** | 30.00 | 3,887.00 |
| **இலங்கை அரசாங்கம்** | 40.00 | 5,184.70 |
| **மொத்தம்** | **220.00** | **28,510.20** |

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்பிகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

(ஐ) செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிகழ்ச்சித்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்பிகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

(உ) நிகழ்ச்சித்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் (செயற்திட்டம் - 1) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இல் அல்லது

அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 01 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 180.00 | 23,325.50 | 3,958.00 | 4.32 | 640.00 | 5.07 | 750.00 |
| ஜீஓஎஸ்எல் | 40.00 | 5,183.60 | - | - | - | - | - |
| சீஈபி | - | - | 450.00 | 2.05 | 303.00 | 3.40 | 504.00 |
| **மொத்தம்** | **220.00** | **28,509.10** | **4,408.00** | **6.37** | **943.00** | **8.47** | **1,254.00** |

ரூபா 23,325.50 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஒதுக்கீட்டில் 2.8 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 750 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 5.07 மில்லியன் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 1 ½ வருடங்கள் கழிந்த பின்னர் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், மிகுதியாகவுள்ள 2 ½ வருடங்களின் போது கடன்களின் முழு ஒதுக்கீட்டையும் பயன்படுத்தும் சாத்தியத்தன்மை யைத்திற்கிடமாகவுள்ளது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் (செயற்திட்டம் - 1) நடவடிக்கைகள் 04 முக்கியமான பகுதிகளுடன் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடவடிக்கைகளின் பௌதீக செயல்முன்னேற்றம் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) நீர்வலுப் பொறியின் உற்பத்தி இயலளவை உயர்த்துவதற்கான மொறகொலவிலுள்ள நீர் மின்சார பொறியின் நிர்மாணத்திற்கான விலைகூறு ஆவணங்களை மீளாய்வு செய்வதற்குரிய ஆலோசனை ஒப்பந்தம் 2016 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் ஆலோசனையாளர் 2016 திசெம்பர் 01 இலேயே வேலையை ஆரம்பித்தார். மேலும், 2014 நவம்பர் இல் உட பலத்த மற்றும் கங்கா எக்கல கோறன பிரதேச செயலகங்களின் அலுவலகங்களில் ரூபா 7.20 மில்லியன் தொகை வைப்பிலிடப்பட்டிருந்த போதிலும், காணி மொறகொலவிலுள்ள நீர் மின்சார பொறியின் நிர்மாணத்திற்கான சுவீகரிப்பு நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சார பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவை உயர்த்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய கப்பாத்துறையிலுள்ள கிறிட் உப நிலையத்தின் நிர்மாண வேலைகள், மற்றும் கேறவலபிற்றிய, கட்டுநாயக்க மற்றும் திருகோணமலையிலுள்ள கிறிட் உபநிலையங்களின் பெரிதாக்கும் வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதிலுள்ள காலதாமதங்களால் 21 சதவீத மெதுவான முன்னேற்றத்தை காட்டியது. மேலும், கேஸ்வேவ மற்றும் களுத்துறையிலுள்ள கிறீட் உபநிலையத்தின் நிர்மாணம் மற்றும் அனுராதபுரத்திலுள்ள பழைய உபநிலையங்களின் பெரிதாக்கும் வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய நோக்கங்களுக்கான தகுதியான ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்வதிலுள்ள காலதாமதத்தால் ஆரம்பநிலையிலுள்ளது.

(இ) இலங்கை மின்சார சபையின் நடுத்தர வோல்ரேஜ் வலையமைப்பின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கான 92 கிலோமீற்றர்களின் 33 கேவி நடுத்தர வோல்ரேஜ் இணைப்புக்களின் தாபித்தலின் கீழான வேலைகள் மற்றும் வவனாத்வே மற்றும் மாதம்பேயில் கான்ரியைஸ் இனை நிர்மாணிப்பதற்காக வேலைகள் ஆரம்ப இணைப்புக்களை இல்லாமல் செய்வதிலுள்ள காலதாமதம் மற்றும் இலங்கை மின்சார சபையால் சுயவிபரத்தை வடிவமைப்பதன் வேலைகளிலுள்ள காலதாமதம் என்பவற்றால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ரூபா 110.11 மில்லியன் தொகையான ஆரம்ப முற்பணங்கள் 2015 திசெம்பர் இல் ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சக்தி வினைத்திறனிற்காக கேள்வி பக்க முகாமைத்துவத்தின் கீழான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகையால் சக்தி சேமிப்பு இலக்குகளை அடைவதற்காக ஸ்மாட் கிறிட் இன் பயன்பாடு மற்றும் மீற்றரிங் தொழில்நுட்பங்கள், ஸ்மாட் சக்தி சேமிப்புடனான மறுசீரமைப்பு கட்டிடங்கள் தொழில்நுட்பம் மற்றும் கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட கட்டிடங்கள் குளிர்ச்சி தேமல் சேமிப்பு இன் தாபிப்பு போன்ற கேள்விகளுக்கு முகாமைத்துவ நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான உபநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நிகழ்ச்சித் திட்டத்தின் (செயற்திட்டம்-1) இன் நடவடிக்கைகளுடன் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்கள் அவர்களுடைய நடவடிக்கைகளின் பயன்பாட்டிற்காக நேரடியாக மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆகையால், நிகழ்ச்சித்திட்டம் (செயற்திட்டம்-1) இனால் வழங்கப்பட்ட நிதிகளில் மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளில் ரூபா 225.50 மில்லியன் கிரயத்தில் 21 மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. எனினும், கடனளிக்கும் முகவரின் அனுமதியை நிருபிப்பதற்கு அதன் மீது எந்தவித சான்றுகளும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வானது, இலங்கை மின்சார சபையானது நேரடியாக மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால் அதே வகையான மோட்டார் வாகனங்கள் ரூபா 201.15 மில்லியன் கிரயத்தில் கொள்வவு செய்திருக்க முடியும் என வெளிப்பட்டிருந்தது.

**3.4 நிதிசார் கட்டுப்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றால் வேண்டப்பட்டவாறு இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் (செயற்திட்டம்-1) 05 பகுதிகளை கொண்டிருந்ததுடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் (செயற்திட்டம்-1) பகுதிகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையில் கையாளப்படுகின்ற அனைத்து நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கிளின் மேற்பார்வைக்காக பொறுப்பாகவுள்ள மேலதிக பொது முகாமையாளருக்கு பதிலாக இலங்கை மின்சார சபையின் வேறுபட்ட பிரிவு தலைவர்களின் அதிகாரத்தின் கீழ் இருந்தது.